இஸ்லாத்தில் எனது முதல்நாள் தொடர் 2



# நான் எவ்வாறு தொழுவது?

தொழுகை முறை பற்றிய தெளிவான விளக்கமும் அம் மகத்தான கிரியையோடு கூடிய சில தெளிவுகளும்

# நான் எவ்வாறு தொழுவது?

தொழுகை முறை பற்றிய தெளிவான விளக்கமும் அம் மகத்தான கிரியையோடு கூடிய சில தெளிவுகளும்

OsoulCenter
www.osoulcenter.com

ح جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة ، ١٤٤٥ هـ

**مركز أصول**

سلسلة يومي الأول في الإسلام (٢): كيف أصلي: شرح مصور لكيفية الصلاة مع وقفات مع هذه الشعيرة العظيمة باللغة التاميلية. / مركز اصول - ط ١. .- الرياض ، ١٤٤٥ هـ

٥٠ ص ؛ ١٤.٨ x ٢١ سم

**رقم الإيداع: ١٤٤٥/٢٤٨٥٩**

**ردمك: ٩٧٨-٦٠٣-٨٤٣٨-٤٦-٦**

Osoul Center
www.osoulcenter.com


- இந்நிறுவனம் இவ்வெளியீட்டைத் தயாரித்து, வடிவமைத்துள்ளது
- எவ்வித மாற்றங்களும் செய்யாமல், பெற்றுக் கொண்ட இடத்தை சுட்டிக்காட்டும் நிபந்தனையுடன் எவ்வழியிலும் இவ்வெளியீட்டை அச்சிட்டு விநியோகிக்க இந்நிறுவனம் அனுமதிக்கின்றது
- அச்சிடும் போது உஸூல் நிறுவனம் சார்ந்திருக்கும் தர நிலையைப் பற்றிப்பிடிப்பது அவசியமாகும்

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்
(ஆரம்பிக்கிறேன்)

# முகவுரை

உலகைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். சாந்தியும் சமாதானமும் எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரது கிளையார், தோழர் அனைவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாம் உபகாரத்தின் மார்க்கமாகும். இது மனிதனுக்கும் அவனது இறைவனுக்கும், மற்றும் மனிதனுக்கும் மக்களுக்கும் இடையே உள்ள நல்லுறவை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மனிதனுக்கும் அவனது இறைவனுக்கும் இடையிலுள்ள தொடர்பில் மகத்தானது தொழுகையாகும். இது மகத்தான ஒரு வணக்கமாகும். அதில் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் முன்னிலையில் நிற்கின்றான். அவன் ஏவிய பிரகாரம் அவனை வழிப்படுகின்றான். அவனை மக்ததுவப்படுத்தி, கண்ணியப்படுத்தி நினைவுகூர்கின்றான், நேசம், அச்சம், எதிர்பார்ப்புடன் அவனிடம் பிரார்த்தனை புரிகின்றான்.

தொழுகைக்குப் பல சிறப்புகள் உள்ளன. அது இஸ்லாத்தின் இரண்டாவது தூணாகும், ஷஹாததைன் கலிமாவாகிய இரு சாட்சியங்களுக்குப் பின் மிகச்சிறந்த நற்செயலாகும், மேலும் சுவனத்தில் பிரவேசிப்பதற்கான மிகப்பிரதான காரணங்களிலும் ஒன்றாகும்.



இதன் மூலம் அல்லாஹ் அந்தஸ்துகளை உயர்த்துகின்றான், மேலும் தவறுகளையும்,பாவங்களையும் கெட்ட செயல்களையும் அழிக்கிறான், அதற்காக நடந்து செல்வதன் மூலம் நன்மைகள் எழுதப்படுகின்றன. காலையிலும், மாலையிலும் தொழுகைக்காக ஒரு முஸ்லிம் மஸ்ஜிதுக்குச் செல்லும் போதெல்லாம் அல்லாஹ் சுவனத்தில் அவனுக்குரிய தங்குமிடம், தரம், விருந்து என்பவற்றைத் தயார் செய்கின்றான்.

ஒரு தொழுகையாளி தனது தொழுமிடத்தில் இருக்கும் காலமெல்லாம் மலக்குகள் அவருக்காகப் பிரார்த்திக்கின்றனர். மறு தொழுகைக்கிடையிலான காலப்பகுதியில் ஏற்படும் பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். இது அவருக்கு ஈருலக ஜோதியாகும். இதர வணக்கங்களை விட இதற்குப் பல மகத்தான சிறப்புகள் உள்ளன. ஜிப்ரீல் (அலை) மூலமன்றி அல்லாஹ்விடமிருந்து தனது நபி (ஸல்) அவர்களுக்கு நேரடியாக இது கடமையாக்கப்பட்டதோடு. புவியிலன்றி இஸ்ராஃ மிஃராஜ் விண்ணுலகப் பயணத்தின் போது வானில் வைத்து கடமையாக்கப்பட்டது என்பதை விட இதற்குப் பெரிய ஆதாரமேதுமில்லை. அல்லாஹ் கூறுகிறான் : "(நபியே!) வஹி மூலம் உமக்கு அறிவிக்கப்பட்ட இவ்வேதத்தை (மக்களுக்கு) நீர் ஓதிக் காண்பித்து தொழுகையைக் கடைப்பிடித்து வருவீராக. ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவற்றுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்)". (அன்கபூத் : 45). நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள் : "ஐவேளைத் தொழுகையின் நிலையானது, உங்கள் வீட்டு வாசலில் ஓடும் ஆழமான நதிக்கு ஒத்திருக்கிறது. அதில் அவர் நாள்தோறும் ஐந்து முறை குளித்துவருகிறார்". ஆதாரம் : முஸ்லிம்.

# பொருளடக்கம்

| தலைப்பு | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1 | தொழுகையில் உள்ளம் மற்றும் உறுப்புக்களின் உள்ளச்சம் | 9 |
| 2 | கடமையான தொழுகைகள் | 13 |
| 3 | தொழுகையின் சட்டதிட்டங்கள் சில | 15 |
| 4 | நான் எவ்வாறு தொழுவது? | 17 |
| 5 | தொழுகையை முறிக்கும் காரியங்கள் | 32 |
| 6 | தொழுகையில் வெறுக்கத்தக்கவை | 33 |
| 7 | நோயாளியின் தொழுகை | 35 |
| 8 | பிரயாணியின் தொழுகை | 36 |
| 9 | தொழுகையில் பெண்களுக்கான பிரத்தியேக சட்டங்கள் | 37 |
| 10 | மதிப்பீட்டு வினாக்கள் | 40 |





## தொழுகையில் உள்ளம் மற்றும் உறுப்புக்களின் உள்ளச்சம் :

உள்ளச்சம்தான் தொழுகையின் உயிர்நாடி. இதயத்தின் இருப்பு, மென்மை, அல்லாஹ்வுக்கு அடிபணிதல், தொழுகையல்லாத வேறு சிந்தனைகளில் பராக்காகாமல் இருத்தல் மூலமே அது உருவாகின்றது. இதன் மூலம் உறுப்புக்கள் அமைதியடைவதுடன், வீண்செயல் தொழுகையிலில்லாத அசைவுகள் போன்றன இல்லாமல் போகின்றன.

உள்ளச்சத்தில் அலட்சியமாக இருப்பது தொழுகையின் கூலியைக் குறைத்து விடுகின்றது. சிலவேளை பாவத்திலும் வீழ்த்திவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஓர் அடியான் தொழுகையொன்றை தொழுகின்றான். அதன் பத்திலொன்று, ஒன்பதிலொன்று, எட்டிலொன்று, ஏழிலொன்று, ஆறிலொன்று, ஐந்திலொன்று, நான்கிலொன்று, மூன்றிலொன்று, பாதியளவு நன்மைதான் அவனுக்கு எழுதப்படுகின்றது". ஆதாரம் : அஹ்மத்.



## உள்ளச்சத்தை வரவழைக்கத் துணை நிற்பவை :

1. உள்ளச்சத்தை வரவழைக்க அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்.
2. தொழுகைக்கு முன்னர் இதர சிந்தனைகளை விட்டுவிடுதல்.
3. நறுமணமிட்டு, தொழுகைக்குப் பொருத்தமான வசதிக்குட்பட்ட ஆடையை அணிந்து கொள்ளல்.
4. முடியுமாயிருந்தால் வீட்டிலேயே வுழுவை சிறப்பாகச் செய்தல்.
5. துர்நாற்றத்தைத் தவிர்ந்து, வாய் மற்றும் ஆடையிலிருந்து அதனை அகற்றுதல்.
6. தொழுகை நேரம் ஆகும் போது உணவும் தயாராக இருந்தால் தொழும் போது அதன்பால் சிந்தனை செல்லாதிருக்க முதலில் அதனை உட்கொள்ள வேண்டும்.



7 தொழுகையின் உள்ளச்சம், அமைதியை சீர்குலைக்காமல் இருக்க மலசலகூடத்தேவை கடுமையாக இருக்கும் போது தொழாமல், அதனை நிறைவேற்றிவிட்டு பின்னர் தொழ வேண்டும்.

8 அமைதியாகவும், கண்ணியத்துடனும் மஸ்ஜிதுக்கு நடந்து செல்லல், இகாமத் சொல்லப்பட்டாலும் ஓடிச் செல்லாதிருத்தல். ஏனெனில் அவசரம் சிந்தனையைச் சிதறடித்து விடுகின்றது.

9 வீட்டிலிருந்து வெளியேறுதல், மஸ்ஜிதுக்குச் செல்லுதல், மஸ்ஜிதினுள் பிரவேசித்தல் போன்ற சந்தர்ப்பங்களுக்குரிய திக்ருகளை ஓதிக் கொள்ளுதல்.


10 மஸ்ஜிதுக்குள் பிரவேசித்ததும் அதற்குரிய காணிக்கை இரு ரக்அத்கள் தொழுதல், தொழுகைக்கு முந்திய ஸுன்னத் தொழுதால் இவ்விரு ரக்அத்களும் தேவையில்லை.

11 தொழுகைக்காக இகாமத் சொல்லும் வரை காத்திருக்கும் போது அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, ஏனைய தொழுகையாளிகளுடன் உலக விடயங்களைக் கதைக்காமலிருத்தல்.



## கடமையான தொழுகைகள் :

அல்லாஹ் முஸ்லிம்கள் மீது தினமும் ஐவேளைத் தொழுகைகளைக் கடமையாக்கியுள்ளான். அவை மார்க்கம் நிர்ணயித்துள்ள குறித்த நேரங்களில் நிகழும். அவை முறையே : பஜ்ரு, ழுஹர், அஸ்ர், மஃரிப், இஷா ஆகியவைகளாகும். இவையனைத்திற்கும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை கொண்ட ரக்அத்கள் உள்ளன. அவையின்றி அத்தொழுகைகள் செல்லுபடியாக மாட்டாது. அதேபோன்றுதான் அவை ஒவ்வொன்றிற்கும் குறித்த நேரம் உள்ளது. அதில்தான் நிறைவேற்றப்பட வேண்டும். நபிமொழிகளில் இடம்பெற்றுள்ள அறிகுறிகள் மூலம் அந்நேரங்களை அறியலாம். அதேபோன்று நம்பகமான கடிகாரங்கள், ஒவ்வொரு வேளையும் முஸ்லிம்கள் கூறும் அதான் ஓசை போன்றன மூலமும் இதனை அறியலாம்.



# தொழுகையின் சட்டதிட்டங்கள் சில :

1. ஒரு முஸ்லிம் எவ்வளவு பாவங்கள் செய்தாலும் அவனால் தொழுகையை விட முடியாது, ஏனெனில் மொத்தமாகவே தொழாதவன் முஸ்லிமில்லை.

2. ஆண்கள் மஸ்ஜிதில் கூட்டாகத் தொழுவதே அடிப்படையாகும். தனித்துத் தொழுவதை விட மஸ்ஜிதில் கூட்டாகத் தொழுவதற்கு மகத்தான கூலியுண்டு, வீடுகள், பாதைகள், பாலைவனங்கள் போன்ற சுத்தமான எந்த இடத்திலும் தொழுவது கூடும்.

3. ஒரு முஸ்லிம் தனது மறைவிடங்களை மறைத்து, சுத்தமான நிலையிலேயே தொழுகையினுள் பிரவேசிக்க வேண்டும். வுழூச் செய்யும் முறை தெரியாவிட்டால் அதனைக் கற்றுக் கொள்வது அவசியமாகும்.


4. தொழுபவர் இமாமாகவோ, தனித்துத் தொழுபவராகவோ இருந்தால் தனக்கு முன்னால் ஒரு தடுப்பை வைத்துக் கொள்வது சிறந்ததாகும். இதைக் கொண்டு இங்கே நாடப்படுவது : தனக்கு முன்னால் கடந்து செல்வோரால் தனக்குப் பாதிப்பு ஏற்படாமலிருக்க தொழுகையில் தனக்கு முன்னால் வைத்துக் கொள்ளும் தடுப்பு போன்ற ஒன்றாகும்.

மேலதிக பயன் ஒன்று : (சுத்தம் என்பது : வுழூச்செய்தல், மற்றும் உடல், தொழுமிடம் ஆகியன சுத்தமாக இருப்பதை உள்ளடக்கும் ஒரு வார்த்தையாகும்).

மேலதிக பயன் ஒன்று : தொழுகை நிறைவேற சில நிபந்தனைகள் உள்ளன, அவை : சுத்தம், நிய்யத் (எண்ணம்), கிப்லாத் திசையை முன்னோக்குதல், நேரம் நுழைதல், அவ்ரத்தை (அவசியம் மறைக்க வேண்டிய பகுதி) மறைத்தல்.







# நான் எவ்வாறு தொழுவது?

தொழுகை முறை பற்றிய விவரணப்படங்களுடன் கூடிய செயன்முறை விளக்கம்



## நான்கு ரக்அத்களைக் கொண்ட தொழுகையை எவ்வாறு தொழுவது?

ழுஹர், அஸர், இஷாத் தொழுகைகளை நிறைவேற்றும் முறையை விளக்கும் படம்



**1** கிப்லாவை முன்னோக்குதல் இது மக்கா நகர் அமைந்துள்ள திசையாகும். அதே கஃபாவை முழுமையான துல்லியத்துடன் நோக்க வேண்டும் என்பது அவசியமில்லை, மாறாக தொழுபவர் கஃபாவிலிருந்து தொலைவில் இருக்கும் போது அது இருக்கும் பொதுவான திசையை முன்னோக்கினால் போதுமாகும். அம்மாளிகையை நேரடியாகக் காண்பவர்தான் அதே கஃபாவை முன்னோக்குவது அவசியமாகின்றது.

**2** நிய்யத் : நாவினால் மொழியாமல் எமது உள்ளத்தால் குறித்த நேரத்திற்கான தொழுகையைத் தொழுகின்றோம் என எண்ண வேண்டும்.

**3** ஆரம்ப தக்பீர் :

அ உள்ளங்கைகளினால் கிப்லாத் திசையை முன்னோக்கி, பின் இரு கைகளையும் எமது தோள்புயம் அல்லது காதின் கீழ்ப் பகுதி வரை உயர்த்தி 'அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் மிகப் பெரியவன்) என தக்பீர் கூறுவோம். தக்பீரை நாவினால் மொழிவது அவசியமாகும்.

ஆ தக்பீர் கூறியதன் பின், வலது கையை இடது கையின் புறப்பகுதியில் படுமாறு வைத்து, நெஞ்சின் மீது, அல்லது தொப்புளுக்கு மேலோ, கீழோ எமக்கு இலகுவான அமைப்பில் வைப்பது ஸுன்னாவாகும்.



பார்கோடை ஸ்கேன் செய்வதன் மூலம், எப்படி தொழுவது என்பது பற்றிய முழுமையான கல்வித் தகவலைப் பார்க்கவும்.

இ ஸுஜூத் செய்யுமிடத்தை நோட்டமிட்டவாறு இருக்க வேண்டும். பார்வையை வானின் பக்கம் உயர்த்துவதோ, திரும்பிப் பார்ப்பதோ கூடாது.

4 ஆரம்ப துஆ : ஆரம்ப துஆக்கள் சில உள்ளன. அவற்றில் ஒன்றைக் கூற வேண்டும் : "அல்லாஹும்ம பாஇத் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல்மஃரிபி. அல்லாஹும்ம நக்கினீ மின் கதாயாய கமா யுனக்கஸ் ஸௌபுல் அப்யழு மினத்தனஸ். அல்லாஹும்மஃஸில்னீ மின் கதாயாய பிஸ்ஸல்ஜி வல்மாஇ வல்பரத்". (அல்லாஹ்வே, கிழக்குக்கும் மேற்குக்குமிடையே நீ ஏற்படுத்திய தூரத்தைப்போல் எனக்கும் என் தவறுகளுக்குமிடையே நீ தூரத்தை ஏற்படுத்து! அல்லாஹ்வே, வெண்மையான ஆடை அழுக்கை விட்டு தூய்மையாக்கப்படுவது போல் என் தவறுகளை விட்டு என்னை நீ தூய்மையாக்கு! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளை நீ கழுவு!)

5 இஸ்திஆதா கூறுதல் : "அஊது பில்லாஹி மினஷ் ஷைதானிர் ரஜீம்" என்று கூறுதல். (சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்).

6 ஸூரா பாதிஹா ஓதுதல் : அமைதியாகவும், ஒவ்வொரு வசனமாகவும் ஸூரா பாதிஹாவை ஓத வேண்டும், இவ்வத்தியாயம் மகத்தான பிரார்த்தனைகளை உள்ளடக்கியுள்ளது, இதனால்தான் முடிந்ததும் "ஆமீன்" எனக் கூறுகின்றோம். "இறைவா! நீ ஏற்றுக் கொள்வாயாக!" என்பதே இதன் அர்த்தமாகும். இது பாதிஹா அத்தியாயத்தின் ஒரு வசனமல்ல.



7 அல்குர்ஆனிலிருந்து முடியுமானதை ஓத வேண்டும் : ஸூரா பாதிஹாவிற்குப் பின் முழுமையான ஒரு ஸூராவையோ, அதில் சில பகுதியையோ ஓத வேண்டும்.





## 8 ருகூஃ செய்தல் :

அ. இரு கைகளையும் தோள் புயத்தளவிற்கு அல்லது காதளவிற்கு உயர்த்தி தக்பீர் சொல்லியவராக நிலையிலிருந்து ருகூஃவிற்குச் செல்ல வேண்டும்.

ஆ. ருகூவிற்கு குனிந்த பின் இரு கைகளின் விரல்களையும் விரித்து, இரு முழங்கால்களையும் பிடித்துக் கொள்ள வேண்டும்.

இ. ருகூஃவில் அமைதியாக இருந்து, முதுகை வில் போன்றல்லாமல் தலையுடன் சமமாக வைக்க வேண்டும். தலையை உயர்த்தவோ, தாழ்த்தவோ கூடாது.

ஈ. இரு கைகளையும் விலாக்களை விட்டும் அகற்றி வைத்து, முகத்தை இரு திசைகளுக்கும் திருப்பாமல் நேரே வைத்திருக்க வேண்டும்.





உ ஸுப்ஹான ரப்பியல் அழீம் (மகத்தான என்னுடைய இறைவனைத் துதிக்கிறேன்) என்று மூன்று தடவை கூற வேண்டும், இதுவே பூரணத்துவத்தின் குறைந்த பட்சமாகும். விரும்பினால் அதிகரித்துக் கொள்ளலாம். ஒரு முறை கூறுவதும் போதுமாகும். ருகூஃவில் ஓதக் கூடிய வேறு சில திக்ருகளும் உள்ளன. அவற்றையும் ஓதலாம்.

9 ருகூஃவிலிருந்து எழும்புதல் : இரு கைகளையும் தோள்புயம் அல்லது காதளவிற்கு உயர்த்தி ருகூஃவிலிருந்து தலையை உயர்த்த வேண்டும். இமாமாக அல்லது தனித்துத் தொழுபவராக இருந்தால் "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹு" (தன்னைப் புகழ்வதை அல்லாஹ் கேட்டுக் கொண்டான்) என்று கூற வேண்டும்.

ருகூவிலிருந்து எழுந்து கையை உயர்த்திய பின் அதை கீழே விட்டு விடவும் முடியும் அல்லது கட்டிக்கொள்ளவும் முடியும்.

10 ருகூஃவிலிருந்து நடுநிலைக்கு வருதல் : "ரப்பனா வலகல் ஹம்து" எனக் கூறி நடுநிலைக்கு வர வேண்டும். ருகூஃவிற்குப் பின் நடுநிலையில் அமைதியாக இருப்பது அவசியம் என்பதுடன், அதனை சற்று நீட்டுவது ஸுன்னாவாகும்.



## 11 ஸுஜூது செய்தல் :

அ தக்பீர் கூறிய நிலையில் நிலத்தை நோக்கி குனிய வேண்டும்.

ஆ அவ்வாறு செல்லும் போது இரு கைகளாலும் முதலில் நிலத்தைத் தொடவும் முடியும், அல்லது இரு முழங்கால்களாலும் முதலில் நிலத்தைத் தொடவும் முடியும். இரு முறைகளிலும் இலகுவானதை செய்துகொள்ள வேண்டும்.

இ ஏழு உறுப்புக்கள் நிலத்தில் படும் வகையில் ஸுஜூது செய்ய வேண்டும். அவை :






■ இவற்றில் எதிலும் நாம் அலட்சியமாக இருந்துவிடலாகாது.

ஈ இரு கைவிரல்களைச் சேர்த்து கிப்லாவை முன்னோக்கிய விதமாகவும், இரு உள்ளங்கைகளையும் தோள்புயங்கள் அல்லது காதுகளுக்கு நேராகவும், இரு முன்னங்கால்களையும் நிலத்தை விட்டும் உயர்த்தியும் வைக்க வேண்டும்.

உ கூட்டாகத் தொழாத பட்சத்தில் இரு முழங்கைகளையும் விலாப் பகுதியை விட்டும் சற்று அகற்றி வைக்க வேண்டும். கூட்டாகத் தொழும் போது பக்கத்திலிருப்பவருக்கு கஷ்டம் கொடுப்பதை அஞ்சிக் கொள்ள வேண்டும்.

ஊ இரு பாத விரல் நுனிகளை கிப்லாத் திசையில் வைத்து, கால்களை நட்டி, தொடைகளை அகற்றி, அவற்றிலிருந்து வயிற்றை சற்று உயர்த்தி வைக்க வேண்டும்.

எ ஸுப்ஹான ரப்பியல் அஃலா (உயர்வான என்னுடைய இறைவனைத் துதிக்கிறேன்) என்று மூன்று தடவை கூற வேண்டும், இதுவே பூரணத்துவத்தின் குறைந்த பட்சமாகும். விரும்பினால் அதிகரித்துக் கொள்ளலாம். ஒரு முறை கூறுவதும் போதுமாகும். வேறு சில திக்ருகளும் உள்ளன. அவற்றையும் மாற்றி, மாற்றி ஓதலாம்.

ஏ மேலும் ஈருலக நலவுகளில் விரும்பியதைக் கேட்டு பிரார்த்திக்கலாம்.

**12** ஸுஜூதிலிருந்து இருப்புக்கு வருதல் : நடுஇருப்பிற்கு உட்காருவதற்காக ஸுஜூதிலிருந்து தலையை உயர்த்தும் நிலையில் "அல்லாஹு அக்பர்" எனக் கூற வேண்டும்.



## 13 நடு இருப்பில் உட்காருதல் :



அ அமைதியான நிலையில் இடது காலை விரித்து அதன் மீது உட்கார்ந்து, வலது காலை நட்டி அதன் விரல்களை கிப்லாத் திசையை நோக்கி வைத்துக் கொள்ளல். அல்லது இரு பாதங்களையும் நட்டி இரு பின்னங்கால்களிலும் உட்கார்ந்து கொள்ளலாம்.

ஆ வலது முன்னங்கையை வலது கால் தொடையின் மீதும், இடது முன்னங்கையை இடது கால் தொடையின் மீதும் முட்டுக்காலில் அல்லது அதற்கு மேலால் வைத்துக் கொள்ள வேண்டும்.

இ "ரப்பிஃபிர்லீ ரப்பிஃபிர்லீ" என்று கூறுதல். (பொருள்) எனதிரட்சகனே எனக்கு மன்னிப்பளிப்பாயாக!)

## 14 ஸுஜூது செய்தல் : பின் இரண்டாம் ஸுஜூதிற்காக தக்பீர் கூறியவாறு சிரம் தாழ்த்த வேண்டும். இதன் போது முதல் ஸஜ்தாவில் செய்தது போன்று செய்ய வேண்டும்.

## 15 ஸுஜூதிலிருந்து எழுதல் : ஸுஜூதிலிருந்து நிலைக்கு வரும் நிலையில் தக்பீர் கூற வேண்டும்.



**16** இரண்டாம் ரக்அத்திற்காக எழுந்திட வேண்டும். முதல் ரக்அத்தில் செய்தது போன்று இதிலும் செய்திட வேண்டும் :

- இரு கைகளையும் நெஞ்சின் மீது வைத்து, ஸூரா பாதிஹா ஓதி, மற்றுமொரு ஸூரா அல்லது அதில் சிறிதளவு ஓத வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ருகூஃ செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹு" என்று கூறிய நிலையில் ருகூஃவிலிருந்து நடுநிலைக்கு வர வேண்டும்.
- பின் நேராக நின்று "ரப்பனா வலகல் ஹம்து" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி நடுஇருப்பில் அமர்ந்து "ரப்பிஃபிர்லீ" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.







## 17 முதலாவது அத்தஹிய்யாத் :

அ "அல்லாஹு அக்பர்" எனக் கூறி ஸுஜூதிலிருந்து எழுந்து நடு இருப்பில் அமர்ந்தவாறு அத்தஹிய்யாத்திற்காக இஃப்திராஷ் (வலது காலை நட்டி இடது காலை விரித்து அதன் மீது உட்கார்தல்) அமைப்பில் உட்கார வேண்டும்.

ஆ வலது கையை வலது தொடையின் மீது ஆட்காட்டி விரலைத் தவிர ஏனைய விரல்களை மடக்கி வைத்து உட்கார வேண்டும். அவ்விரலால் கிப்லாத்திசையை சுட்டிக் காட்ட வேண்டும். அல்லது நடுவிரலுடன் பெருவிரலை வளையல் போன்று வைத்து ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டலாம். இடது கையை இடது தொடையில் விரித்தோ, முட்டுக்காலில் மடக்கியோ வைத்துக் கொள்ளலாம்.

இ அத்தஹிய்யாத் ஓதும்போது ஆட்காட்டி விரலைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஈ அதில் அத்தஹிய்யாத் ஓத வேண்டும். அது பின்வருமாறு : "அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு, அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன், அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு". (சொல், செயல், பொருள் சார்ந்த எல்லாக் காணிக்கைகளும், வணக்கங்களும், பாராட்டுகளும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்கள் மீது சாந்தியும், அல்லாஹ்வின் அருளும், அபிவிருத்தியும் ஏற்படட்டுமாக. எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் சாந்தி உண்டாகட்டும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் தூதரும் அடியாருமாவார்கள் என்றும் உறுதியாக நம்புகிறேன்).



**18** அத்தஹிய்யாத்திலிருந்து எழுதல் : மூன்றாம் ரக்அத்துக்காக எழ வேண்டும். அதன் போது இருகைகளையும் தோள்புயம் அல்லது காதுகள் அளவிற்கு உயர்த்தி தக்பீர் கூறிய நிலையில் எழ வேண்டும். முதலாம் ரக்அத்தைப் போன்றே இதிலும் செய்ய வேண்டும். எனினும் நிலையில் பாத்திஹா மாத்திரமே ஓத வேண்டும்.

- பின் தக்பீர் கூறி ருகூஃ செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- "ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதஹு" என்று கூறிய நிலையில் ருகூஃவிலிருந்து நடுநிலைக்கு வர வேண்டும்.
- பின் நேராக நின்று "ரப்பனா வலகல் ஹம்து" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி நடுஇருப்பில் அமர்ந்து "ரப்பிஃபிர்லீ" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.

**19** ஸுஜூதிலிருந்து எழுதல் : "அல்லாஹு அக்பர்" என்று கூறி ஸுஜூதிலிருந்து நிலைக்கு வந்து, இரண்டாவது ரக்அத்தில் செய்தது போன்று நான்காம் ரக்அத்திலும் செய்ய வேண்டும். எனினும் இதில் பாதிஹா மாத்திரமே ஓத வேண்டும்.

- பின் தக்பீர் கூறி ருகூஃ செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- "ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதஹு" என்று கூறிய நிலையில் ருகூஃவிலிருந்து நடுநிலைக்கு வர வேண்டும்.
- பின் நேராக நின்று "ரப்பனா வலகல் ஹம்து" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி நடுஇருப்பில் அமர்ந்து "ரப்பிஃபிர்லீ" என்று கூற வேண்டும்.
- பின் தக்பீர் கூறி ஸுஜூது செய்து, மேற்கண்ட தஸ்பீஹ்களைக் கூற வேண்டும்.

## 20 இறுதி அத்தஹிய்யாத் :

- அ "அல்லாஹு அக்பர்" என்று கூறி ஸுஜூதிலிருந்து எழுந்து அத்தஹிய்யாத்திற்காக அமர வேண்டும்.
- ஆ இந்த அமர்வில் தவர்ருக் அமைப்பில் உட்கார வேண்டும். அதாவது மண்டியிட்டு தரையில் இருப்பிடம் படியுமாறு அமர்ந்து, இடதுகாலை வலதுகாலுக்குக் கீழ் வெளிப்படுத்தி, வலதுகாலை இஃப்திராஷ் அமைப்பில் போன்று நாட்டி வைக்க வேண்டும்.
- இ இதில் அத்தஹிய்யாதை இறுதி வரை ஓதி விட்டு, ஸலவாதுல் இப்ராஹீமிய்யாவை ஓத வேண்டும் : "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், கமா ஸல்லைத அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்". (இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும், இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ அருள் புரிந்ததைப் போல் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீதும் நீ அருள் புரிவாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனாகவும், கண்ணியத்திற்குரியவனாகவும் இருக்கிறாய். இறைவா! இப்ராஹீம் (அலை) அவர்களுக்கும், இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தாருக்கும் நீ விருத்தி செய்தது போல் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும், முஹம்மத் (ஸல்) அவர்களின் குடும்பத்தாருக்கும் விருத்தி செய்வாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனாகவும், கண்ணியத்திற் குரியவனாகவும் இருக்கிறாய்). பின்னர் நபிமொழிகளில் இடம்பெற்றுள்ள ஆதாரபூர்வமான துஆக்களில் முடியுமானவற்றை ஓத வேண்டும், உதாரணமாக : "அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அதாபி ஜஹன்னம, வமின் அதாபில் கப்ரி, வமின் பித்னதில் மஹ்யா வல்மமாதி, வமின் பித்னதில் மஸீஹித் தஜ்ஜால்". (எங்கள் இரட்சகனே! நரக வேதனையிலிருந்தும், கப்ருடைய வேதனையிலிருந்தும், வாழ்வு, மரணம் ஆகியவற்றின் சோதனையிலிருந்தும், தஜ்ஜாலின் குழப்பத்தின் தீங்கிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்).

மேலும் ஈருலக நலவுகளில் விரும்பியதைக் கேட்டு பிரார்த்திப்போம்.





21 ஸலாம் கூறுதல் : முகத்தை மாத்திரம் வலது புறம் திருப்பி "அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹ்" என்று கூறி விட்டு, இடது புறமும் அவ்வாறு திரும்பி "அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹ்" என்று கூற வேண்டும். இதன் மூலம் எமது தொழுகை நிறைவடைந்து விடுகின்றது.

22 தொழுபவர் ஸலாம் கூறியதன் பின். சற்று அமர்ந்து "அஸ்தஃபிருல்லாஹ்" என மூன்று தடவை கூறிவிட்டு, நபியவர்கள் ஓதிய திக்ருகளையும் ஓதுவது ஸுன்னத்தாகும்.





## இரண்டு ரக்அத்களைக் கொண்ட, அல்லது மூன்று ரக்அத்களைக் கொண்ட தொழுகைகளை எவ்வாறு தொழுவது?

அ பஜ்ர் தொழுகை போன்ற இரண்டு ரக்அத்களைக் கொண்ட தொழுகையாக இருந்தால் இரண்டாம் ரக்அத்தின் இரு ஸஜ்தாக்களும் நிறைவுற்றவுடன் அத்தஹிய்யாத்திற்காக அமர்ந்து அதனை முழுமையாக ஓதி விட்டு, ஸலவாதுல் இப்ராஹீமிய்யாவையும் ஓதி, பின் ஸலாம் கூற வேண்டும்.

ஆ மஃரிப் தொழுகை போன்ற மூன்று ரக்அத்களைக் கொண்ட தொழுகையாக இருந்தால் மூன்றாம் ரக்அத்தின் இரு ஸஜ்தாக்களும் நிறைவுற்றவுடன் அத்தஹிய்யாத்திற்காக அமர்ந்து அதனை முழுமையாக ஓதி விட்டு, ஸலவாதுல் இப்ராஹீமிய்யாவையும் ஓதி, பின் ஸலாம் கூற வேண்டும்.

### குறிப்புக்கள் :

1. இஃப்திராஷ் முறையிலான அமர்வு : ஃபஜ்ர், ஜுமுஆ, இரு பெருநாள் தொழுகைகள் போன்ற இரண்டு ரக்அத் தொழுகையில் இடம் பெறும் அத்தஹிய்யாத் இருப்பு, மூன்று ரக்அத், நான்கு ரக்அத் தொழுகைகளில் இடம்பெறும் முதல் அத்தஹிய்யாத் இருப்பு, இரு ஸுஜூதுகளுக்கிடையில் அமரும் இருப்பு போன்றவற்றில் "இப்திராஷ்" முறையில் உட்கார வேண்டும்.

2. தவர்ருக் முறையிலான அமர்வு : மூன்று மற்றும் நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகையில் இறுதி அத்தஹிய்யாத்தில் தவர்ருக் முறையில் அமர வேண்டும்.

3. உடல் பருமன், பாதங்களில் வலி போன்ற காரணங்களுக்காக இஃப்திராஷ், தவர்ருக் இருப்புகளில் அமர முடியாதவர்கள் தம்மால் முடியுமான முறைகளில் அமர்ந்துகொள்ளலாம்.

# தொழுகையை முறிக்கும் காரியங்கள் :

1. தொழுகையின் நிபந்தனைகளில் ஒன்றை, செய்ய முடியுமாயிருக்கும் பட்சத்திலும் விடுதல்.

2. வேண்டுமென்றே தொழுகையின் பிரதான கடமைகளில் (தூண்களில்) ஒன்றை விடுதல்.

3. வேண்டுமென்றே தொழுகையின் வாஜிப்களில் ஒன்றை விடுதல்.

4. வேண்டுமென்றே அத்தியவசியமின்றி அதிகமான செயல்கள், பேச்சு. நடை என்பவற்றில் ஈடுபடல்.

5. சிரிப்பு, மற்றும் சப்தமிட்டு சிரித்தல்.

6. வேண்டுமென்றே உண்ணல், பருகல்.

தொழுகையில் ஏற்படும் மறதி நிலைகளுக்கென சட்டங்கள் உள்ளன. முஸ்லிம்கள் அதனைக் கற்பது அவசியமாகும்.

# தொழுகையில் வெறுக்கத்தக்கவை :

சில விடயங்கள் உள்ளன, அவற்றை செய்வதினால் தொழுகை முறியமாட்டாது, இருப்பினும் அவை வெறுக்கத்தக்கவையாகும். எனவே தொழுபவர் அவற்றை செய்யலாகாது. அவற்றுள் சில :

1. தொழுகையில் முகத்தை திருப்புதல்.

2. உடல் உருப்புக்களின் மூலம் வீண் விளையாட்டுக்களில் ஈடுபடல், விரல்களை நெட்டி முறித்தல், விரல்களைக் கோர்த்தல்.

3. தொழுபவரைத் திசைதிருப்பும் பொருள் ஏதும் இருக்கும் திசையில் தொழுதல்.

4. மல, சலத்தை அடக்கிய நிலையில் தொழுதல்.

5. கடமையான தொழுகைகளின் முதலிரு ரக்அத்களில் ஸூரா பாதிஹாவுடன் மாத்திரம் சுருக்கிக் கொள்ளுதல்.

6. உணவு தயாராக இருக்கும் போது தொழுதல்.

7. ஆடைகளை கூட்டி, சுருட்டிக் கொண்டு தொழுதல்.





# நோயாளியின் தொழுகை :

கடமையான தொழுகைகள் பருவமடைந்த, புத்தியுள்ள ஒரு முஸ்லிமை விட்டும் எச்சந்தர்ப்பத்திலும் தளரமாட்டாது. மாதவிடாய், பிரசவ இரத்தம் உள்ள காலங்களில் தவிர பெண்களை விட்டும் வேறு எச்சந்தர்ப்பத்திலும் தளர மாட்டாது.

எனவே ஒரு முஸ்லிம் அதனை என்றும் எப்போதும் நிறைவேற்றுவது அவசியமாகும்.

இருப்பினும் ஒரு முஸ்லிம் நோயுற்று, தொழுவது சிரமமாக இருந்தால் என்ன செய்வது?

ஒரு மனிதனுக்கு அவனது சக்தியை மீறி எதனையும் அவன் மீது சுமத்தாமலிருப்பது அல்லாஹ்வின் அருட்களில் ஒன்றாகும். ஒரு முஸ்லிம் நோயுற்று கடமையான தொழுகையை நின்ற நிலையில் தொழ முடியாவிட்டால் உட்கார்ந்து தொழலாம், நின்று தொழல் என்ற அக்கடமை அவரை விட்டும் தளர்ந்து விடுகின்றது. இதர கடமைகளை முடியுமானளவு செய்ய வேண்டும். ருகூஃ, ஸுஜூது செய்ய முடியாவிட்டால் அவ்விரண்டையும் சைக்கினை மூலம் நிறைவேற்ற வேண்டும். (அதாவது : சுஜூதில் முடியுமானளவு குனிய வேண்டும். ருகூஃவில் குனிவதை விட சற்று அதிகமாக குனிய வேண்டும்). ருகூஃ, ஸுஜூது இரண்டில் ஒன்றை மாத்திரம் செய்ய முடியுமாக இருந்தால் அதனை மாத்திரம் செய்ய வேண்டும். முடியாததை சைக்கினை மூலம் நிறை வேற்ற வேண்டும்.

உட்கார்ந்தும் தொழ முடியாவிட்டால் கிப்லாத் திசையை முடியுமானளவு முன்னோக்கி பக்க வாட்டில் தொழ வேண்டும், ருகூஃ, ஸுஜூதை சைக்கினை மூலம் நிறைவேற்ற வேண்டும்.

பக்க வாட்டில் சாய்ந்து தொழ முடியாதவர்கள் இரு கால்களும் கிப்லாத்திசையில் இருக்கும் நிலையில் படுத்துக் கொண்டு தொழ வேண்டும். முடியுமாயிருந்தால் தலையை உயர்த்தி, ருகூஃ, ஸுஜூதை சைக்கினை செய்ய வேண்டும்.

சைக்கனை செய்யவும் முடியாவிட்டால் அதுவும் தளர்ந்து விடும், ருகூஃ, ஸுஜூதை மனதால் எண்ணிக் கொள்ள வேண்டும்.

**எனவே நோயாளியின் தொழுகையில் உள்ள பொது விதி :**

தொழுகையின் கடமைகளில் எதுவெல்லாம் அவரால் செய்ய முடியுமோ அவற்றை முடியுமான அமைப்பில் செய்ய வேண்டும். செய்ய முடியாதவை அவரை விட்டும் தளர்ந்து விடும்.



## பிரயாணியின் தொழுகை :

தொழுகையில் பயணிக்கு சில இலகுபடுத்தல்கள் இருப்பதும் இஸ்லாத்தின் நெகிழ்வுத்தன்மையில் உள்ளதாகும். அவருக்கு ழுஹர், அஸர், இஷா ஆகிய நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகையை சுருக்கலாம். இம்மூன்று தொழுகைகளையும் இரண்டிரண்டு ரக்அத்களாக அவருக்குத் தொழலாம்.



## தொழுகையில் பெண்களுக்கான பிரத்தியேக சட்டங்கள் :

பெண்களுக்கென பிரத்தியேகமாக உள்ள சில குறைவான சட்டங்களைத் தவிர, தொழுகையின் சட்டங்களில் அவள் முழுமையாக ஆணைப் போன்றவளாகும். அவ்வாறான சட்டங்களுள் சில :

- மாதவிடாய், பிரசவ இரத்தம் உள்ள நிலையில் பெண்ணை விட்டும் தொழுகை தளர்த்தப்படுகின்றது. பின் அதனை மீட்ட வேண்டியதும் இல்லை.

- ஜும்ஆத் தொழுகை பெண்களுக்குக் கடமையில்லை.

- கடமையான தொழுகைகளை கூட்டாக நிறைவேற்ற வேண்டிய அவசியம் பெண்களுக்கில்லை.

- தொழுகையில் ஒரு பெண் தனது முகத்தையும் இரு முன்னங்கைகளையும் தவிர உடலின் அனைத்துப் பகுதிகளையும் மறைப்பது கடமையாகும்.



# இறுதியாக

அல்லாஹ் எமக்கும், முஸ்லிமான எமது சகோதர, சகோதரிகளுக்கும் மார்க்கத்தின் இம்மாபெரும் கடமையை அவனைத் திருப்திப்படுத்தும் விதத்தில் நிறைவேற்ற அனுகூலம் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம். அவனது உற்ற நண்பர் இப்ராஹீம் (அலை) அவர்கள் கேட்ட பிரார்த்தனையை நாம் கேட்கின்றோம் : "என் இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக! எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக" (இப்ராஹீம் : 40).

அல்லாஹ்வே மிக அறிந்தவன், அவன் தனது அடியாரும், நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலாதும், ஸலாமும் கூறி, பரகத் செய்வானாக.



# மதிப்பீட்டு வினாக்கள் :

**1** (சரி), (பிழை) அடையாளமிடுக :

- [ ] தொழுகை ஓர் அடியான் தனது இறைவனுடன் தொடர்பு கொள்வதாகும். அதிலே அல்லாஹ்வை மகத்துவப்படுத்தி, கண்ணியப்படுத்தும் விதத்தில் அவன் முன்னிலையில் நிற்கின்றான்.
- [ ] உள்ளச்சத்தில் அலட்சியமாக இருப்பது தொழுகையின் கூலியைக் குறைத்து விடும்.
- [ ] அனைத்து முஸ்லிம்கள் மீதும் தொழுகை கடமையாகும். பாவத்தில் மூழ்கியுள்ள ஒருவராக இருந்தாலும் சரியே.
- [ ] கிப்லா என்பதன் மூலம் நாடப்படுவது மக்கா திசையாகும்.
- [ ] நிய்யத் இன்றி ஒரு முஸ்லிமின் தொழுகை நிறைவேறும்.
- [ ] ஸூரா பாதிஹா ஓதுவது பிரதான கடமையாகும். அதனை ஓத முடியாமனவர்களின் தொழுகை அதுவன்றி நிறைவேற மாட்டாது.
- [ ] முஸ்லிமான, புத்தியுள்ள, பருவமடைந்தவர்களில் மாதவிடாய், பிரசவ இரத்தம் உள்ள பெண்களைத் தவிர்ந்த வேறு யாரையும் விட்டும் தொழுகை தளர மாட்டாது.
- [ ] நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகையை பயணி இரண்டு ரக்அத்களாகத் தொழலாம்.

- ☐ ஜும்ஆ, கூட்டுத் தொழுகை பெண்களுக்குக் கடமையில்லை.
- ☐ நிற்க முடியாதவர் உட்கார்ந்து தொழுதால் அத்தொழுகை நிறைவேறுமா?
- ☐ தொழுகையில் முகத்தைத் திருப்ப முடியுமா?
- ☐ தொழுகையில் உண்ணவோ, கதைக்கவோ முடியுமா?
- ☐ கிப்லாத்திசையை அறிய முடியுமாயிருந்தும் வேறு திசையில் தொழுதவரின் தொழுகை நிறைவேறுமா?
- ☐ ஸுஜூது செய்து, நிலத்தை விட்டும் தனது அனைத்து விரல்களையும் உயர்த்திக் கொண்டவரின் ஸுஜூது நிறைவேறுமா?

# மதிப்பீட்டு வினாக்கள் :

**2** முதலாம் ரக்அத்தில் ஒரு ஸஜ்தாவை மறந்து, இரண்டாம் ரக்அத்தில் அது நினைவிற்கு வந்தால், அவர் மறதியாக இருந்ததன் காரணமாக ஒரு ஸஜ்தாவுடன் மாத்திரம் முதலாவது ரக்அத் நிறைவேறுமா?

☐ ஆம் ☐ இல்லை

**3** தெரிவு செய்க :

1. தினமும் ஒரு முஸ்லிம் தொழ வேண்டிய கடமையான தொழுகைகள்

☐ ஏழு ☐ பத்து ☐ ஐந்து

2. தொழுகை நிறைவேறுவதற்கான நிபந்தனைகள்

☐ சுத்தம் ☐ நிய்யத் ☐ கிப்லாவை முன்னோக்குதல்

☐ மேற்கூறப்பட்ட அனைத்தும்

3. ருகூஃவில் ஓதும் ஹதீத்களில் உள்ள துஆக்களில் உள்ளவை

☐ ஸுப்ஹான ரப்பியல் அஃலா

☐ ஸுப்ஹான ரப்பியல் அழீம்

☐ அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்

4. அத்தஹிய்யாதிலிருந்து எழுந்ததும் என்ன செய்ய வேண்டும்?

☐ தக்பீர் கூறி, நிலைக்கு வந்து பாதிஹா ஓதிவிட்டு, பின் ருகூஃ செய்தல்

☐ தக்பீர் கூறி ஸுஜூது செய்தல்

5. இயற்கைத் தேவையிருப்பதுடன் தொழுதவரின் தொழுகை நிலை என்ன?

☐ வெறுக்கத்தக்கது

☐ தடுக்கப்பட்டது

☐ ஆகுமானது

# மதிப்பீட்டு வினாக்கள் :

**4** பூரணப்படுத்துக :

1. இரு சாட்சியங்களுக்கு அடுத்து வணக்கங்களில் சிறந்தது.........................
2. மஃரிப் தொழுகை ........................................................ ரக்அத்களாகும், ழுஹர் தொழுகை .................................. ரக்அத்களாகும்.
3. தொழுகையை தக்பீர் கூறி ஆரம்பிப்போம், அதனை ............................. முடிப்போம்.
4. தொழுகையில் ஒரு பெண் தனது ..................................,............................. தவிர உடலின் அனைத்துப் பகுதிகளையும் மறைப்பது கடமையாகும்.

**5** தொழுகையின் சிறப்புகள் மூன்று கூறுக?

................................................................................................................................................

................................................................................................................................................

**6** தொழுகையை நிலைநாட்டுவதன் முக்கியத்துவத்திற்கு ஓர் ஆதாரம் தருக?

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

**7** இறுதி அத்தஹிய்யாதின் வாசகத்தைக் கூறுக?

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

8 இரு ஸுஜூத்களுக்கிடையில் ஓதும், ஹதீதில் இடம்பெறும் துஆ எது ?

..........................................................................................

9 ஸுஜூதில் ஓதும் ஹதீதில் இடம்பெறும் துஆ எது ?

..........................................................................................

10 உள்ளச்சத்தை வரவழைக்கத் துணை நிற்கும் நான்கு விடயங்களைக் கூறுக?

..........................................................................................

11 நான்கு ரக்அத்களைக் கொண்ட கடமையான தொழுகைகள் எவை?

..........................................................................................

12 தொழுகையில் உட்கார வேண்டிய முறையில் உட்கார முடியாமையினால் ஒருவர் கதிரையில் உட்கார்ந்து தொழுதால் அவரது தொழுகை நிறைவேறுமா?

..........................................................................................

13 வேண்டுமென்றே முதலாவது அத்தஹிய்யாத்தை விட்டால் அவரது தொழுகையின் நிலை என்ன?

..........................................................................................

# தொழுகை மகத்தான அடையாளச் சின்னம்

முஸ்லிம்கள் தினமும் ஐந்து வேளை கடமையாக நிறைவேற்றக்கூடிய, அவர்களிடம் சக்தி இருக்கும் வரை விடாத, அதற்காக தூக்கத்தின் இன்பம், வேலைப்பளுக்களைக் கூட விடக்கூடிய இத்தொழுகையானது, ஒரு குழந்தை பயப்படும் போதெல்லாம் பாதுகாப்புத் தேடி ஒதுங்கும் தாய்மடி போன்றாகும். ஒரு முஸ்லிம் தனது இறைவனை ஒருமைப்படுத்தியதன் பின், கற்று, கற்பிப்பதில் மிகவும் அக்கறை எடுக்க வேண்டிய விடயம் இதுவே. இச்சிறுநூலில் தொழுகையை அதன் தக்பீர் முதல் ஸலாம் வரை விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான வேறு சில சட்டங்களையும் விளக்குகின்றது.

பார்கோடை ஸ்கேன் செய்வதன் மூலம் எப்படி தொழுவது என்பதை காணொளியினூடாக பார்க்கலாம்.


ربَّنا ولكَ الحمدُ
حمدًا كثيرًا طيِّبًا مُبارَكًا فيه

OsoulCenter
www.osoulcenter.com

CHAT & DECIDE

இஸ்லாத்தைப் பற்றி
பன்மொழிகளில் உரையாடுங்கள்

GUIDE TO ISLAM

இஸ்லாத்தைப் பற்றி
மேலும் அறிந்து கொள்ள

முஸ்லிம்கள் தினமும் ஐந்து வேளை கடமையாக நிறைவேற்றக்கூடிய, அவர்களிடம் சக்தி இருக்கும் வரை விடாத, அதற்காக தூக்கத்தின் இன்பம், வேலைப்பளுக்களைக் கூட விடக்கூடிய இத்தொழுகையானது, ஒரு குழந்தை பயப்படும் போதெல்லாம் பாதுகாப்புத் தேடி ஒதுங்கும் தாய்மடி போன்றாகும். ஒரு முஸ்லிம் தனது இறைவனை ஒருமைப்படுத்தியதன் பின், கற்று, கற்பிப்பதில் மிகவும் அக்கறை எடுக்க வேண்டிய விடயம் இதுவே. இச்சிறுநூலில் தொழுகையை அதன் தக்பீர் முதல் ஸலாம் வரை விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான வேறு சில சட்டங்களையும் விளக்குகின்றது.

பார்கோடை ஸ்கேன் செய்வதன் மூலம் எப்படி தொழுவது என்பதை காணொளியினூடாக பார்க்கலாம்.

osoulcenter

ISO 9001

www.osoulcontent.org.sa

இந்த புத்தகத்தையும் மற்ற புத்தகங்களையும் ஊஸுூல் வியாபாரஸ்தலத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய:

OSOUL STORE

osoulstore.com